

மதுரவாயல் வடக்கு பகுதி 145 வது வட்டச் செயலாளர் ப.ஆலன் மகள் ஆன்டிரியாஜெசிகா பூப்புனித விழா சென்னை நெற்குன்றம் சி.எஸ்.ஐ. இம்மானுவேல் ஆலய வளாகத்தில் நடைபெற்றது.இதில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரப்பாக்கம் கா.கணபதி, வளசரவாக்கம் மண்டல குழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பராமரிப்பு பணி: சென்னை

## மாநகராட்சி இணையவழி சேவை 2 நாள் நிறுத்தம்!

சென்னை, பிப்.26-

பெருநகர சென்னை மாநகராட்சியின் இணைய வழி சேவை கள் அனைத்தும் பராமரிப்புப் பணி காரண மாக 28.02.2025 (வெள்ளிக் கிழமை) அன்று இரவு 10 மணி முதல் 02.03.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று இரவு 10 மணி வரை நிறுத்தம் செய்யப்படுகிறது என தெரி வித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு சென்னை மாந கராட்சி தெரிவித்துள்ளது.







காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி மதுராந்தகம் வடக்கு ஒன்றியம் பாக முகவர்கள் பாக நிலை குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் வடக்கு ஒன்றிய செயலாளர் பி.எச். சத்யசாய் தலைமையில் 1.சிந்து உமாபதி இல்லம் 2. அன்பழகன் அலுவலகம் புக்கத்துறை 3. ஜே ஆர் செந்தில் அலுவலகம் பள்ளியகரம் 4. தனசேகர் இல்லம் கள்ளபிரான் ஆகிய இடங்களில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ., பாராளுமன்ற உறுப்பினர் க. செல்வம் எம்.பி, மதுராந்தகம் தொகுதி பார்வையாளர் எம்.டி.ஆர்.சாரதி, மணிமாறன் ஆகியோர் ஆலோசனை வழங்கினர். மதுராந்தகம் வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் எம்.எஸ்.ஆறுமுகம், எஸ். தனசேகர், ஆர்.தமிழரசன், பி.சித்ரா, ஞான செல்வம், எஸ்.தேவராஜ், கே.எஸ்ம.ணியன், கே. பார்த்தசாரதி, சி.சுந்தர வரதர் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், ஒன்றிய நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகம் முகவர்கள், பாக நிலை குழு உறுப்பினர், கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

தமிழர் எழுச்சி நாளை முன்னிட்டு ஏ.எம்.வி.பிரபாகரராஜா எம்.எல்.ஏ. தலைமையில்

# விருகம்பாக்கம் தொகுதியில் மாணவச் செல்வங்களுக்கு கல்வி உதவித் தொகை!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

சென்னை, பிப். 26 விருகம்பாக்கம் சட்ட மன்றத் தொகுதியில் சட் டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா தலைமையில் ரூபாய் 10,47,000 மதிப்பீட்டில் மாணவ செல்வங்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சி இன்று (26.02.2025 புதன் கிழமை) மாலை 4 மணிக்கு, விருகம்பாக்கம், ஆவிச்சி பள்ளி உள்ள காமாட்சி மண்டபத்தில் நடைபெறுகிறது.

பகுதிக் கழகச் செயலா ளர்கள் மு.ராசா எம்.சி, கே.கண்ணன் எம்.சி. முன்னிலையில் மாவட் டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிர மணியன் தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்வில் நாடாளு மன்ற உறுப்பினர் முனை வர் தமிழச்சி தங்கபாண் டியன், கணக்கு நிலைக் குழுத் தலைவர் க.தனசே கரன், தொகுதிப் பொறுப் பாளர் வே.உமாகாந்த், மாநில வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்து மாணிக்கம், மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் உ.துரை ராஜ், எஸ்.டி.தங்கராஜ், முருகேசன், மாமன்ற உறுப்பினர் பொன்.வர. லோகு, ரத்னா லோகேஸ் வரன், வட்டக் கழகச் செயலாளர் எஸ்.மைக் கேல், மு.கோவிந்த ரா ஜன், வழக்கறிஞர் வீ.ஏ. ராஜா, பழக்கடை பாஸ் கர், தஞ்சை பாபு, பூக் கடை பழனிச்சாமி, இரா. செழியன் பி.கே.குமார், அ. கதிரேசன், வழக்கறி ஞர் சதீஷ் கண்ணன், ஜம்பு முருகன், செந்தில் குமார்,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சசிகு மார், நிஷா சையத், கனி மொழி தனசேகரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கள் எம்.விநாயகமூர்த்தி, சங்கர் கணேஷ், கிருஷ் ணகுமார், ஜெ.இ. பாண் டியன், கா.வீ.தியாக ராஜன், ராமாபுரம் ரவி, கோட்டூர் பிரகாஷ் மற் றும் பகுதிக் கழக நிர்வா கிகள் ச.நாகராஜன், வாட்டர் விஜயகுமார், விஜயலட்சுமி து.ரஞ்சித் குமார், எஸ்.உமாபதி, அஜந்தா ரவி, தியாகு, பாபு

மற்றும் மாவட்ட தலைவர்கள் ராமமூர்த்தி, சுபா.முத்துவேல், சென்னை அரங்கநாதன் பகுதி இளைஞரணி அமைப்பாளர்கள் ந.மணி கண்டன், சி.எச்.தினேஷ் உள்ளிட்ட கழகத்தினர் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.





சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதிக்குட்பட்ட, 101 வது வட்டத்தில் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், மாநில தகவல் தொழிட்நுட்ப அணி துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் ஏற்பாட்டில் பொங்கல் திருநாள் பரிசுத் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், 101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், 101 வது வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ், 101 (அ) வது வட்டக் கழகச் செயலாளர் சி.பி.திருமலை மற்றும் 101 மற்றும் 101 (அ) வது வட்டக் கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர். மேலும் 80,000 குடும்பங்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது.





இந்தித் திணிப்பைக் கண்டித்து மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு, தமிழ்நாடு (FSO – TN) இவர்களுடன் சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி இணைந்து சென்னை பி.எஸ்.என்.எல். அலுவலகம், ஆர்.கே. மடம் சாலை மந்தவெளியில் நேற்று (24.2.2025) மாவட்டஅமைப்பாளர் எஸ். சரவணன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் புளியங்குடி அல்அமீன், தேசிய துணைத் தலைவர், எம்.எஸ்.எப்., மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதிச் செயலாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி மாணவர் அணியினர், மாணவர் அணி பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், வட்டச் செயலாளர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், கல்லூரி மாணவர்கள் பெருந்திரளாகப் பங்கேற்றனர்.


